## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No.227/2014 | Date : 17.10.2023 | DW2 |
|---|---|---|
| Name: கிருஷ்ணன் | S/o. **ஆறுமுகம்** | |
| Evidence Recorded Time: 12.46 P.M. to 01.20 P.M | | |

**6, 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

வழக்கு சொத்து ஆரம்பத்தில் நாராயண பிள்ளை மகன் துரைசாமிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். துரைசாமிக்கு மூன்று மனைவிகள் என்றால் சரிதான். துரைசாமியின் மூன்று மனைவிகள் பெயர்கள் தெரியுமா என்றால் பாப்பாயம்மாள், பாப்பா, மற்றொரு மனைவி பெயர் எனக்கு நினைவில்லை, நான் சிறு வயதாக இருக்கும் போதே இறந்துவிட்டார். ஜோதிலிங்கம் மற்றும் ராமநாதபிள்ளை அம்மா பெயர் என்ன என்றால் ராமாத்தாள் ஆகும். வழக்கு சொத்து சர்வே எண்.240/1–ல் உள்ள சொத்துக்களை ஜோதிலிங்கம் மற்றும் ராமநாதபிள்ளை ஆகியோருக்கு ஒதுக்கப்பட்டது என்றால் பாகப்பிரிவினை நடைபெறவில்லை. மேற்படி நபர்கள் பெயரில் பாகப்பிரிவினை நடைபெற்று அவர்கள் பெயர்களில் பட்டா, வருவாய் துறை ஆவணங்கள் மாற்றப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களில் எனக்கு உரிமை இல்லை என்றால் சரிதான். நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. சாட்சி சொல்ல என்னை யார் அழைத்தார்கள் என்றால் ஊரில் உள்ள பெரியவர்கள் யாருக்கும் தெரியும் என்று கேட்டார்கள், அதனால் நான் சாட்சியம் அளிக்க வந்தேன். வாதி பிரதிவாதி குடும்பத்தில் நான் உடன் பிறவாத சகோதரர் ஆவேன். என் நிலத்திற்கு அருகில் என்னென்ன காடுகள் உள்ளது, பக்கத்து நிலத்து சர்வே எண்கள் தெரியுமா என்றால் சர்வே எண் தெரியாது, யார் யார் அனுபவத்தில் இருக்கிறார்கள் என்று தெரியும். நான் சொல்லியுள்ளது போல சம்பூரணம் என்பவரை தவிர மற்றவர்கள் கூட்டு சுவாதீனத்தில் இல்லை என்று சொல்லியுள்ளது போல ஜோதிலிங்கம் மற்றும் ராமநாதபிள்ளை பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் அவ்வாறு இல்லை. ஜோதிலிங்கம் மற்றும் ராமநாதபிள்ளை கூட்டு சுவாதீனத்தில் இல்லாத காரணத்தினால்தான் பாகம் பிரித்துகொண்டு அவர்கள் நிலத்தை ஓட்டி வருகிறார்கள் என்றால் சரியல்ல, சம்பூரணம்

பிள்ளைகள்தான் ஓட்டி வருகிறார்கள். விருப்புறுதி ஆவணம் உள்ளதாக என்னுடைய பிரமாண பத்திரத்தில் சொல்லியுள்ளேன், அது என்ன ஆவணம் என்றால் துரைசாமிபிள்ளை அவருடைய மக்கள் ஆறு பேருக்கு உயில் எழுதி வைத்துள்ளார். ஆறு பேர் பெயருக்கு எழுதி வைத்ததாக கேள்விபட்டேன், அவர்கள் பெயர்கள் தெரியாது. குமரேசன் என்பவர் யார் என்றால் துரைசாமிக்கு ஆறாவது மருமகன் ஆவார். குமேரசன் குத்தகைக்கு ஓட்டி வந்ததாக சொல்லியுள்ளேன் குத்தகை பத்திரம் எப்போது எழுதப்பட்டது என்றால் குத்தகைக்கு பத்திரம் எழுதவில்லை வாய்மொழியாகத்தான் குத்தகைக்கு விடப்படும். குமரேசன் எப்போது இறந்தார் என்றால் 2021–ல் இறந்தார், தேதி, மாதம் தெரியாது. குமரேசனும், அவருடைய ஆயுள் பின்னர் அவருடைய மக்கள்தான் நிலத்தை ஓட்டி வருகிறார்கள் என்று பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல, அதுதான் உண்மை. தாவா சொத்தின் ஒரு பகுதி ஜோதிலிங்கம் மற்றும் ராமநாதபிள்ளைக்கும் ஏற்கனவே பாகம் பிரித்து வருவாய் துறை ஆவணங்களில் பெயர் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றாலும், நான் முன்னுக்குபின் முரணாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(6, 7 பிரதிவாதிகளின் குறுக்கு விசாரணையை 8–ம் பிரதிவாதி தனது தரப்பு குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்கிறார்.)**

**<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை –</u>**

இந்த வழக்கை யார் யார் மீது என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் ஓரளவிற்கு தெரியும், ராமமுத்தாள், சம்பூரணம் மற்றும் அவர் தங்கை மீது வழக்கு தாக்கல் செய்தது தெரியும், பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிளை யார் சொன்னார்கள் என்றால் நான்தான் சொன்னேன். குட்டப்பட்டி கிராமத்தில் எனக்கு சொந்தமாக நிலமோ, வீடோ இல்லை என்றால் 10 ஏக்கர் நிலம் உள்ளது. வழக்கு சொத்திற்கு அருகில் உள்ளதா என்றால் ஓடைக்கு தென்புறத்தில் உள்ளது. வழக்கு சொத்திற்கு பக்கத்தில் எனது நிலம் உள்ளது என்னுடைய வாக்குமூலத்தில் உள்ளதா என்றால் இல்லை . வாதி, பிரதிவாதியை தெரியும் என்று சொல்லியுள்ளேன். வாதி, பிரதிவாதி யார் என்றால் ராமாத்தாள் வகையா, சம்பூரணம் வகையறா பிரதிவாதி ஆவார். நீதிமன்றத்தில் இன்று

ஆஜராகியுள்ள லட்சுமி, விமலா, குமரேசன் மகள் காஞ்சனா ஆகியோர்கள் ஆஜராகியுள்ளார்கள். சம்பூரணம் மற்றும் அவரது குடும்பத்தார் என்னை சாட்சி சொல்ல அழைக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு எத்தனை சர்வே எண்களுக்கு, எவ்வளவு நிலத்திற்கு போட்டுள்ளார்கள் என்றால் சர்வே எண்கள் தெரியாது, மொத்தம் 7 ஏக்கர் இருக்கும். துரைசாமிபிள்ளையை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். வழக்கு சொத்துக்கள் துரைசாமிக்கு எந்த வகையில் பாத்தியப்பட்டது என்றால் பூர்வீகமாகவும், சுய சம்பாத்தியமாகவும் பாத்தியப்பட்டது. துரைசாமி பிள்ளை எழுதி வைத்த உயிலை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன், படித்துள்ளேனா என்றால் படித்தேன் தற்போது நினைவில்லை. உயிலில் என்ன சரத்துகள் சொல்லப்பட்டுள்ளது என்று எனக்கு முழுமையாக தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்துக்களை வாதிகளும், பிரதிவாதிகளும் பாகம் பிரித்துக்கொள்ள உரிமை இல்லாதவர்கள் என்று கூறியுள்ளேன் சம்பூரணம் வகையறா சொன்னதன் அடிப்படையில்தான் நான் சொல்கிறேன் என்றால் சரியல்ல, உயிலின் அடிப்படையில் சொல்கிறேன். சம்பூரணத்தின் கணவர் குமரேசன் என் நண்பர் என்றால் நெருங்கிய நண்பர் இல்லை, பழக்கம். குமரேசன் எந்த வகையில் குத்தகைதாரராக இருந்தார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியும். வருடத்திற்கு எவ்வளவு குத்தகைக்கு விடப்பட்டது என்று தெரியுமா என்றால் குத்தகை தொகை குறிப்பிட்டு பேசவில்லை, விளைச்சலை பொறுத்துதான் குத்தகை நிர்ணம் செய்யப்பட்டது. விளைச்சலில்தான் குத்தகை எடுத்துக்கொள்ளவேண்டும் என்ற சங்கதியை முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்து அமைந்துள்ளா நிலம் சமமான பூமியா என்றால் மேடு பள்ளம் உள்ள பூமியாகும். குமரேசனோ, சம்பூரணமோ எந்த கிணறு, ஆழ்துளை கிணறு, வீடு ஆகியவற்றை அமைத்துக்கொள்ளவில்லை என்றால் பழைய வீட்டை புதுப்பித்தார்கள், கிணற்றிற்கு ஆயில் இன்ஜின் வைத்துள்ளார்கள். தாவா சொத்தை சொந்த செலவில் மேம்படுத்தினார்கள் என்று கூறியுள்ளேன் என்றால் எந்த வகையில் அவ்வாறு மேம்படுத்தினார்கள் என்றால் வீடுகட்டினார்கள், கிணற்றை தூர்வாரி ஆயில் இன்ஜின் வைத்தார். மேம்பாடு செய்து கொண்டதற்கான கணக்குகளை நேர் செய்து கொள்ளலாம் என்று எந்த ஆண்டு குமரேசன் கேட்டார் என்றால் ஐந்தாறு ஆண்டுகளாக பஞ்சாயத்து நடைபெற்று வருகிறது. லட்சுமியம்மாள் வகையறா தாவா சொத்துக்களை பாகம்

பிரித்துக்கொள்ள முயற்சி செய்ததிலிருந்து பிரச்சனை இருந்து வருகிறது என்றால் அதற்கு முன்பிருந்தே இருந்து வருகிறது. நான் சொல்வது போல குமரேசனோ, அவரது குடும்பத்தாரோ குத்தைக்கு இல்லை என்றாலும், வாதிகளும், மற்ற பிரதிவாதிகளும் கூட்டு சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்றாலும், சம்பூரணமும், அவரது வாரிசுகளும் வாதிகளின் பாகத்தை ஏமாற்றும் நோக்கில் குத்தகைக்கு ஓட்டி வந்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், குமரேசன் என் நண்பர் என்பதால் அவரின் வாரிசுகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

<u>மறுவிசாரணை – இல்லை.</u>

ஒம்/–DW2,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.